திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதிக்கதை – 10.05.2026

அன்பு எதையும் தாங்கும்..!

துறவி ஒருவர், தனக்குத் தேவையான பொருட்களை எல்லாம் ஒரு பையில் போட்டு தூக்கிக் கொண்டு மலை உச்சியை நோக்கி ஏறிக் கொண்டிருந்தார்.

அது செங்குத்தான மழையாக இருந்தது. எனவே மேலே ஏற ஏற, அந்த பையை தூக்க முடியாமல் துறவிக்கு மூச்சு வாங்க ஆரம்பித்தது.

அவருக்கு சற்று தூரம் முன்னால், ஒரு மலைவாழ் சிறுமி தனது மூன்று வயது தம்பியை தூக்கிக் கொண்டு… உற்சாகமாக பாடல் ஒன்றை பாடிக்கொண்டு… மிகவும் சாதாரணமாக மலை உச்சியை நோக்கி போவதை பார்த்தார்.

துறவிக்கோ ஆச்சரியம். அந்த சிறுமியை அழைத்தார்.

" இவ்வளவு சிறிய பையைத் தூக்கிக்கொண்டு மலை ஏற என்னால் முடியவில்லை. உன்னால் எப்படி அம்மா இந்த பையனையும் தூக்கிக்கொண்டு மலை ஏற முடிகிறது? " என்று கேட்டார்.

அதற்கு அந்தச் சிறுமி, " ஐயா… நீங்கள் தூக்கிக் கொண்டிருப்பது ஒரு சுமையை.. ஆனால், நான் தூக்கிக் கொண்டிருப்பது என் தம்பியை.." என்று சொல்லிவிட்டு மீண்டும் அதே பாட்டைப் பாடிக்கொண்டு மலை ஏற ஆரம்பித்தாள்.

அன்பு.. எதையும் சுமக்கும் என்பதை உணர்ந்த துறவி, சிரித்தபடியே தன் பயணத்தைத் தொடர்ந்தார்.